பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

11 12 2025 6 45

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழகம் உட்பட 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன்பிரதேசங்களில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் கீழ் கணக்கீட்டுப் படிவங்களை சமர்ப்பிக்க இன்று கடைசி நாளாகும்.

2. அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் 17 ரயில் நிலையங்களில் மேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. பிரசார் பாரதி மூலம் அரசு நலத்திட்டங்கள், பேரிடர் எச்சரிக்கை குறித்த தகவல்கள் விரிவாக அளிக்கப்படுவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே மக்களின் குறைகளுக்கு தீர்வு காண முடியும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

5. தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான 3வது மற்றும் கடைசி ஹாக்கிப் போட்டியில் இந்தியா வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது.`ஹ

--- இனி விரிவான செய்திகள் ---

-------------

தமிழகம் உட்பட 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன்பிரதேசங்களில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் கீழ் கணக்கீட்டுப் படிவங்களை சமர்ப்பிக்க இன்று கடைசி நாளாகும்.

வரைவு வாக்காளர் பட்டியல் இம்மாதம் 16ஆம் தேதி வெளியிடப்படும்.

வாக்காளர் பட்டியலில் பெயர்களை சேர்க்க மற்றும் நீக்குவதற்கு இம்மாதம் 16ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 15ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்.

இறுதி வாக்காளர் பட்டியல் பிப்ரவரி மாதம் 14ஆம் தேதி வெளியிடப்பட உள்ளது.

இதற்கிடையே எஸ்.ஐ.ஆர். பணியின்போது கண்டறிய முடியாத, காலமான மற்றும் போலி வாக்காளர்கள் குறித்த பட்டியலை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி முகவர்களிடம் அளிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுவதற்கு முன்பாக எந்தவொரு தவறையும் நிவர்த்தி செய்ய முடியும் என்று கூறியுள்ளது.

இந்நிலையில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 10 சட்டப்பேரவைத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆட்சியர் திரு. பிரதாப் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

-------------

அம்ரித் பாரத் திட்டத்ன்கீழ் தமிழகத்தில் 17 ரயில் நிலையங்களில் மேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், மேலும் 56 ரயில் நிலையங்களில் பணிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

நான்கு ரயில் நிலையங்களில் மேம்பாட்டுப் பணிகளுக்கான செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நடப்பு நிதியாண்டில் ரயில்வே பட்ஜெட்டில் தமிழகத்திற்காக 6 ஆயிரத்து 626 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டள்ளதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் சுட்டிக்காட்டினார்.

-------------

பிரசார் பாரதி மூலம் அரசு நலத்திட்டங்கள், பேரிடர் எச்சரிக்கை குறித்த தகவல்கள் விரிவாக அளிக்கப்படுவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், குறிப்பாக ஊரக மற்றும் கடைக்கோடிப் பகுதிகளில் அரசு நலத்திட்டங்கள், பொது அறிவிப்பு, பேரிடர் தொடர்பான தகவல்களை அளிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

பேரிடர் தொடர்பான எச்சரிக்கைகள், குறுஞ்செய்தி, மொபைல் செயலிகள் உள்ளிட்டவை மூலம் பிராந்திய மொழிகளில் அளிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

பிரசார் பாரதி மூலம் மக்களுக்கு உரிய தகவல்கள் சென்று சேர்வதை அரசு உறுதி செய்வதாக அவர் கூறினார்.

அரசு திட்டங்கள் குறித்த நிகழ்ச்சிகள், ஆவணப்படங்கள், பேரிடர் தொடர்பான அறிவுரைகள் ஆகியவற்றை உரிய நேரத்தில் தூர்தர்ஷன் மற்றும் டி.டி. நியூஸ் ஒளிபரப்புவதாக அவர் தெரிவித்தார்.

News On Air செயலியில் 260க்கும் அதிகமான ஆகாஷ்வானி நிலையங்களின் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுவதாகவும் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டார்.

-------------

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் நடைபெற்று வரும் மறுசீரமைப்புப் பணிகள் காரணமாக சில ரயில்கள் தாம்பரத்தில் இருந்து இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

அதன்படி தஞ்சாவூர் உழவன் எக்ஸ்பிரஸ், கொல்லம் அனந்தபுரி எக்ஸ்பிரஸ், ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் ஆகிய ரயில்கள் இம்மாதம் 16ஆம் தேதி முதல் பிப்ரவரி மாதம் 3ஆம் தேதி வரை தாம்பரத்தில் இருந்து புறப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறுமார்க்கத்தில் இந்த ரயில்கள் தாம்பரம் வரை மட்டுமே இயக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

சென்னை எழும்பூரில் இருந்து மும்பைக்கு இயக்கப்படும் CSMT அதிவிரைவு ரயில் இம்மாதம் 16ஆம் தேதி முதல் பிப்ரவரி 3ஆம் தேதி வரை சென்னை கடற்கரை ரயில் நிலையத்தில் இருந்து புறப்படும் என்றும், மறு மார்க்கத்தில் இந்த ரயில், சென்னை கடற்கரை வரை மட்டுமே இயக்கப்படும் என்றும் தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுளது.

-------------

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே மக்களின் குறைகளுக்கு தீர்வு காண முடியும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட ஓரிக்கை பகுதியில் விவசாயிகள், நெசவாளர்கள் மற்றும் தொழில்முனைவோரை சந்தித்து குறைகளைக் கேட்டறிந்தார்.

அப்போது பேசிய அவர், ஆளும் திமுக அரசு தேவையின்றி மத்திய அரசை எதிர்த்து வருவதாக குற்றம் சாட்டினார்.

-------------

நீலகிரி மாவட்டம் உதகையில் உள்ள தொட்டாபெட்டா காட்சிமுனைக்குச் செல்லும் சாலையில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதையடுத்து தொட்டபெட்டா காட்சி முனை இன்று முதல் தற்காலிகமாக மூடப்படுவதாக வனத்துறை அறிவித்துள்ளது.

-------------

*இருவரிச் செய்திகள்*

யுக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பான அமெரிக்கா தலைமையிலான திட்டம் தொடர்ந்து தீவிரமாக செயல்படுத்தப்படும் என்று இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி அரசு தெரிவித்துள்ளது.

-------------

மொராக்கோ நாட்டில் நான்கு மாடிக் கட்டிடம் இடிந்து விழுந்த விபத்தில் 22 பேர் உயிரிழந்தனர். 16 பேர் காயமடைந்தனர்.

-------------

தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை குறித்த இந்தியா-மலேசியா இடையேயான பணிக்குழுக் கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.

-------------

கேரளாவில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகளின்கீழ் பெறப்பட்ட கணக்கீட்டுப் படிவங்களில் 98 புள்ளி ஆறு நான்கு சதவீதம் டிஜிட்டல்மயமாக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

-------------

சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி நாமக்கல் மாவட்டத்தில் வாக்கு எண்ணும் மையம் அமைப்பது தொடர்பாக ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி முதற்கட்ட ஆய்வு மேற்கொண்டார்.

-------------

திருப்பத்தூர் மாவட்ட காவல்துறை சார்பில் நடைபெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 51 மனுக்கள் பெறப்பட்டது.

-------------

கடற்படையில் உள்ள வேலைவாய்ப்பு தொடர்பான பயிலரங்கு திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

-------------

கொல்கத்தா ஹவுராவில் இருந்து கன்னியாகுமரிக்கு வந்த எக்ஸ்பிரஸ் ரயிலில் இருந்த 18 கிலோ போதைப்பொருளை ரயில்வே காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

-------------

ஈரோடு மாவட்டம் மல்லன்குழி பகுதியில் விளைநிலங்களில் உலவிய யானைகளை வனத்துறையினர் வனப்பகுதிக்குள் விரட்டியடித்தனர்.

-------------

சென்னை திரு.வி.க. நகரில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான மருத்துவ முகாம் இன்று நடைபெறுகிறது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான 3வது மற்றும் கடைசி ஹாக்கிப் போட்டியில் இந்தியா 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரை இந்தியா 2-0 என்ற ஆட்டக் கணக்கில் வென்றது. ஒரு போட்டி டிராவில் முடிவடைந்தது.

---------------

உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் ஜெர்மனி கோப்பையை வென்றது.

சென்னையில் நேற்றிரவு நடைபெற்ற இறுதிப் போட்டியில் அந்த அணி ஷூட்அவுட் முறையில் 3-2 என்ற கோல் கணக்கில் ஸ்பெயினை வென்றது.

முன்னதாக நடைபெற்ற வெண்கலப்ப பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியா 4-2 என்ற கோல் கணக்கில் அர்ஜென்டினாவை வென்றது.

வெண்கலப் பதக்கம் வென்ற இந்திய வீரர்களுக்கு ஹாக்கி இந்தியா சார்பில் தலா 5 லட்சம் ரூபாய் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

---------------

உலகக்கோப்பை ஸ்குவாஷ் போட்டியில் இந்தியா இன்று பிரேசிலை எதிர்கொள்கிறது.

சென்னை எக்ஸ்பிரஸ் அவென்யூவில் இப்போட்டி பிற்பகல் மணி 2.30க்கு தொடங்குகிறது.

-------------

இந்தியா - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான இரண்டாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

<<<<The End>>>>